Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.423/2009

Deposition of witness for: PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஒய்யான் | Father/Husband Name | : லெட்சுமணன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 14.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14 day of 05.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது சாணிப்பட்டியை சேர்ந்த அழகுநாச்சிபுரத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி தொத்தன் எனது மாமா மகன். ஆஜர் எதிரியை தெரியும்.

1999ம் வருடம் மணிமுத்து என்பவரிடன் 36 சென்ட் கிரையம் வாங்கியிருந்தேன். அவரது தந்தை கான வீரணனின் மகன் வழி பேரன்களான கலையரசன், இளையரசன் ஆகியோர்கள் சென்டில்மென்ட் எழுதிக்கொண்டு மாண்புமிகு மேலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் நான் கிரையமாக பெற்றுக்கொண்டு சொத்தின் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கு 2003ம் வருடம் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த தீர்ப்பை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்ல் மேல்முறையீடு செய்தேன். அந்த மேல்முறையீட்டு வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பானது. அதன்பின்னர் 2004ம் வருடம் 4ம் மாதம் எனது மனைவி அழகுபிள்ளை அந்த இடத்திற்கு அருகே உள்ள வயக்காட்டில் எனது மனிவி சாணி கொட்டிவிட்டு வரும்போது மணிமுத்து கல்லை கொண்டு எறிந்து எனது மனைவிய்ன் தலையில் காயம் ஏற்பட்டு எனது மனைவி கீழே

விழுந்தவிட்டார், அதன்பின்னர் நானும் கல்லை அவர் மீது எறிந்தேன். அவர் ஓடி சென்று பாறையிலிருந்து கீழே விழுந்துவிட்டார். அதுசம்மந்தமாக எங்கள் இருவர் மீதும் மேலவளவு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தார்கள். எனது மனைவிக்கும், மணிமுத்துவிற்கும் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தபோது மணிமுத்து இறந்துவிட்டார். அதனால் என் மீது கொலை வழக்கு பதிவு செய்தார்கள். மேற்படி வழக்கில் மேதகு நீதிமன்றத்தில் 30 நாட்கள் நிபந்தனை கையொப்பம் செய்து வந்தேன். அதன்பிறகு நான் கேசம்பட்டிக்கு சென்றுவிட்டேன். அங்கு உள்ள நபர்கள் எனது வயலில் உள்ள புளியமரம், மோட்டார், வீடு ஆகியவற்றை சேதப்படுத்தியதாக சொன்னார்கள். அதைப்பார்பதற்காக வந்தேன்.

கடந்த 24.08.2004ம் தேதி சுமார் மாலை 03.00 மணியளவில் நானும், எனது மாமா மகன் தொத்தன் என்ற சின்னழகும் எங்களது தென்னந்தோப்பிற்கு கேணியில் உள்ள மோட்டரை உடைத்தது சம்மந்தமாக பார்க்க சென்றோம். வீரணன், முத்துக்காளை, செல்வராஜ் என்ற வீரணன், குமரன், வோணாங்கி என்ற அழகு, அம்மாபிள்ளை, அழகி, மணிமுத்து மனைவி நாச்சிகண்ணு, ஒய்யான் மகன் சின்னத்துரை நாங்கள் கேணிக்க போவதை பார்த்துவிட்டு அழகுநாச்சிபுரத்திலிருந்து பூண்பொறித்த கம்பு ஆகியற்றுடன் வந்து முத்துக்காளை பூண்பொறித்த கம்பால் எனது கையில் அடித்தார், அதனால் எனக்கு எழும்பு முறிவு ஏற்பட்டது, செல்வராஜ் கம்பு கொண்டு முதுகில் அடித்தார், குமரன் எனது பக்க விலாவில் அடித்தார், வீரணன் கையால் அடித்தார், மணிமுத்து மனைவி கம்பால் அடித்தார், மற்றவர்கள் கையால் அடித்தார்கள், என்னுடன் வந்த தொத்தன் என்னை அடித்து கொன்றுவிடுவார்கள் என்று பயந்து மேலவளவு காவல் நிலையத்திற்கு ஓடி போய் தகவல் சொன்னான். அழகு நாச்சிபுரம் பஸ் ஸ்டாப்பில் உள்ள புளியமரத்தில் என்னை கட்டி வைத்தார்கள். அப்போது இறந்துபோன மணிமுத்துவின் மனைவி நாச்சிக்கண்ணு அருவாளால் வெட்ட வரும்போது நான் மிதித்து கீழே

தள்ளிவிட்டேன். உடனே அங்கு இரந்த வீரணன் நான் கொலை கேஸில் மாட்டிவிடுவேன் என்று அருவாளை எடுத்து சென்றார், உடனே நாச்சிக்கண்ணு வீட்டிற்குள் ஒடி மண்ணெண்னைய் ஊற்றி தீப்பற்ற முயன்றார். அப்போது அந்த வழியாக இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் என்னை பார்த்தார், நான் அவரிடம் அய்யா அவிற்றுவிடுங்கள் என்று சொன்னேன், அவர் என்னை அவிற்றுவிட்டார். இரவு 07.00 மணியளவில் மேலவளவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் நான் கொடுத்ததுதான். **(அந்த புகார் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ). (இவ்வழக்கின் தாய் வழக்கான CC No 561/2004ல் பிரித்தெடுக்கப்பட்ட வழக்கு என்பதனால் இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் தாய் வழக்கு முடிந்த பின்னர் நகல் எடுக்கப்பட்டு நீதிமன்றத்தால் இவ்வழக்குகோப்பில் வைக்கப்பட்டுள்ளது ).** எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவமனையில் இடது கையில் ஏற்பட்ட காயம் எழும்பு முறிவு ஏற்பட்டதாக சொன்னார்கள், கட்டு போட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்**

( எதிரிதரப்பில் குறுக்குவிசாணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை, இத்துடன் குறுக்குவிசாரணை முடித்துவைக்கப்படுகிறது. )